www.agaram.lk

# ரோயல் கல்லூரி

**கொழும்பு - 07**

**முதலாந் தவணைப் பரீட்சை - 2021**

**தரம் - 11**

## வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் - I

| 60 | T | I |
|---|---|---|

| | | |
|---|---|---|
| பெயர் ............................................. | வகுப்பு ........... | சுட்டெண் .................. |

**குறிப்பு**

- ✦ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ✦ **1 முதல் 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள (1), (2), (3), (4) ஆகிய விடைகளுள் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

◊ **01 தொடக்கம் 04 வரையான வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடையளிக்க**

தையலில் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்துள்ள உபேகா சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கான ஆடைகளை உற்பத்தி செய்யும் வணிகம் ஒன்றை 'விலாசிதா' எனும் பெயரில் வீட்டிலேயே ஆரம்பித்தார். அவர் அருகாமையிலுள்ள கடைகளுக்கு அவரது உற்பத்திகளை விநியோகித்து வந்ததுடன் தற்போது வேறு நகரங்களிலிருந்தும் கட்டளைகள் கிடைக்கின்றன. அத்துடன் இரு திறமையான ஊழியர்களையும் வேலைக்கமர்த்தினார்.

01) உபேகாவின் வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படும் தேவை.
1) பெண்களுக்கான சட்டை 2) சிறுவர் காற்சட்டைகள்
3) ஆடைகள் 4) வீடமைப்பு

02) தகவல்களின் அடிப்படையில் உபேகாவின் வணிகமானது.
1) பங்குடமையாகும். 2) சேவை வழங்கும் வணிகமாகும்.
3) பொருள் உற்பத்தி வணிகமாகும். 4) இலாப நோக்கமுடைய வணிகமாகும்.

03) உபேகா வணிகத்தின் வாய்ப்பொன்றாக அமைவது.
1) ஒத்துழைப்பான ஊழியர்களைக் கொண்டிருத்தல்.
2) டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்துள்ளமை.
3) அருகில் கடைகள் காணப்படல.
4) வேறு நகரங்களிலுள்ள கடைகளிலிருந்து கட்டளைகளை பெறல்.

04) மிகச் சரியான விடையை தெரிவு செய்க.
1) உபேகா வணிகம் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும்.
2) உபேகா வணிகம் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.
3) அவரது ஆடைகளுக்கான கேள்வி படிப்படியாக குறைவடைகிறது.
4) வணிகத்தை விருத்தி செய்வதற்கு பல தடைகள் காணப்படுகின்றன.

05) வணிகமொன்றின் உரிமையாளர்கள் அனைவரும் கூட்டாக இணைந்து முகாமை செய்வதற்குப் பொருத்தமான வணிக அமைப்பு.
1) தனியுடைமை வணிகம் 2 பங்குடமை வணிகம்
3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி 4) சங்கங்கள்

06) அக்கறையுடைய தரப்பினரான வழங்குனர்கள் வணிகத்தில் அக்கறை கொள்வதன் நோக்கம்.
1) அதிக இலாபத்தைப் பெறுவதற்கு.
2) உற்பத்திப் பொருட்களின் விலையை தீர்மானிப்பதற்கு
3) சிறந்த முகாமைத் தீர்மானங்களை எடுப்பதற்கு.
4) தொடர்ச்சியாக கட்டளைகளைப் பெறுவதற்கு



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

07) புறச் சூழல் காரணிகளை மட்டும் கொண்ட தொகுதியை தெரிவு செய்க.
   1) வாடிக்கையாளர், ஊழியர், போட்டியாளர்.
   2) உரிமையாளர், ஊழியர், முகாமையாளர்.
   3) உரிமையாளர், ஊழியர், போட்டியாளர்.
   4) வாடிக்கையாளர், வழங்குனர், போட்டியாளர்.

08) பங்குடமையொன்றில் பங்காளர்களின் உச்ச எண்ணிக்கையை வரையறுக்கும் சட்டம்.
   1) 1890ம் ஆண்டு பங்குடமைக் கட்டளைச் சட்டம்.
   2) 1840ம் ஆண்டு மோசடி தவிர்ப்புக் கட்டளைச் சட்டம்.
   3) 1918ம் ஆண்டு 06ம் இலக்க வியாபார பெயர்ப் பதிவுக் கட்டளைச் சட்டம்.
   4) 2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிச் சட்டம்.

09) நிரல் X ஆனது வியாபார வகைகள் தொடர்பான விளக்கத்தையும் நிரல் Y ஆனது வியாபார வகைகளையும் கொண்டுள்ளது.

| X | | Y |
|---|---|---|
| 1. | மீள் விற்பனை நோக்கம் கருதி பொருட்களை விற்பனை செய்தல். | A. இறக்குமதி வியாபாரம் |
| 2. | ஒரு தொகை தேயிலையை அமெரிக்காவிற்கு விற்பனை செய்தல். | B. மொத்த வியாபாரம் |
| 3. | இறுதி நுகர்வுக்காக பொருட்களை விற்பனை செய்தல். | C. ஏற்றுமதி வியாபாரம் |
| 4. | ஒரு தொகை பருப்பை இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்தல். | D. சில்லறை வியாபாரம் |

நிரல் X உடன் நிரல் Y ஐ தொடர்புபடுத்தும் போது பெறப்படும் சரியான விடை.
   1) BCAD   2) CBAD   3) BCDA   4) CBDA

10) வணிகர் ஒருவர் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு உகந்த கணக்கு வகை.
   1) நடைமுறைக் கணக்கு   2) தனயோஜனா கணக்கு
   3) சேமிப்புக் கணக்கு   4) நிலையான வைப்பு

11) காசோலையொன்றின் காந்தமைப்புல பகுதியில் (MICR) உள்ள விடயங்களை ஒழுங்கு முறையில் காட்டும் தொகுதியை தெரிவு செய்க.
   1) வங்கி இலக்கம், காசோலை இலக்கம், வங்கிக்கிளை இலக்கம், வங்கி கணக்கிலக்கம்.
   2) காசோலை இலக்கம், வங்கி இலக்கம், வங்கிக்கிளை இலக்கம், வங்கி கணக்கிலக்கம்.
   3) காசோலை இலக்கம், வங்கிக்கிளை இலக்கம், வங்கி இலக்கம், வங்கி கணக்கிலக்கம்.
   4) வங்கி கணக்கிலக்கம், காசோலை இலக்கம், வங்கி இலக்கம், வங்கிக்கிளை இலக்கம்,

12) சதுர தனது ரூ. 2 000 000 பெறுமதியான லொறியொன்றிற்கு ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் இல் பூரணக் காப்புறுதியைப் பெற்றுள்ளார். விபத்தொன்றில் ரூ. 500 000 அளவில் லொறி சேதமடைந்தது. எனவே சதுர பெற்று கொள்ளக்கூடிய ஆகக்கூடிய இழப்பீட்டுத் தொகை.
   1) ரூ. 500 000   2) ரூ. 1 500 000   3) ரூ. 2 000 000   4) ரூ. 2 500 000

13) அஞ்சனா மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட விரிவுரை மூலமாக இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக கற்றார். அத்துடன் தொலைக்காட்சியில் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான நிகழ்ச்சிகளை பார்வையிட்டதுடன் அது தொடர்பாக தினமின செய்தித்தாளிலும் ஆக்கம் ஒன்றை வாசித்தார். அஞ்சனா இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக கற்பதற்காக பயன்படுத்திய தொடர்பாடல் முறைகள் முறையே.
   1) இலத்திரனியல், எழுத்து, வாய்மொழி
   2) இலத்திரனியல், வாய்மொழி, எழுத்து
   3) வாய்மொழி, இலத்திரனியல், எழுத்து
   4) வாய்மொழி, எழுத்து, இலத்திரனியல்,

14) போக்குவரத்தின் அடிப்படை மூலங்களைக் கொண்ட தொகுதியை தெரிவு செய்க.
   1) வழி, வலு, மோட்டார் வாகனங்கள், வான்வழி
   2) வழி, ஊடகம், சக்தி, தரிப்பிடம்.
   3) ஊடகம், கப்பல், துறைமுகம், சக்தி
   4) சக்தி, தரிப்பிடம், பேருந்து, புகையிரதம்

15) உற்பத்தி வணிகமொன்றில் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் பகுதிக்குரிய முகாமையாளரை நியமித்தல் முகாமைத்துவ செயற்பாட்டில் எக்கருமம் ஆகும்?
   1) திட்டமிடல் 2) ஒழுங்கமைத்தல் 3) நெறிப்படுத்தல் 4) கட்டுப்படுத்தல்

16) ''இலங்கையில் காலணிகளை உற்பத்தி செய்யும் பிரபல்யமான வணிகமானது 2021ம் ஆண்டிற்கான தேசிய கரப்பந்தாட்ட தொடர் ஒழுங்கமைப்பதாக தீர்மானித்துள்ளது'' இக்கூற்றில் வெளிப்படுத்தல் உருப்படி எது?
   1) விளம்பரப்படுத்தல் 2) தனியாள் விற்பனை
   3) பொதுமக்கள் தொடர்பு 4) விற்பனை மேம்படுத்தல்

17) கணக்கீட்டின் அடிப்படை நோக்கமானது.
   1) வணிகத்தினால் உழைக்கப்படும் இலாபத்தை அறிதல்.
   2) வணிகத்தின் நிதி நிலைமையை அறிதல்
   3) அக்கறையுடைய தரப்பினர்களுக்கு தகவல் வழங்குதல்.
   4) சட்டத் தேவைகளை பூர்த்தி செய்தல்.

18) கீழ்வரும் கணக்கீட்டு சமன்பாடு கொடுக்கல் வாங்கல் ஒன்றின் விளைவை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

| **சொத்துக்கள்** | **= உரிமையாண்மை +** | **பொறுப்புக்கள்** |
|---|---|---|
| + 5000 | | + 5000 |

மேற்கூறப்பட்ட விளைவினை ஏற்படுத்தும் மிகச் சரியான கொடுக்கல் வாங்கல்கள் எது?
   1) ரூபா. 5000 பெறுமதியான பண்டங்கள் கடனுக்கு விற்கப்பட்டது.
   2) ரூபா. 5000 வாடகை வருமானம் பெறப்பட்டது.
   3) மேலதிக மூலதனம் ரூபா. 5000 இடப்பட்டது.
   4) ரூபா. 5000 பெறுமதியான பண்டங்கள் நளினிடம் கொள்வனவு செய்யப்பட்டது.

19) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களில் உரிமையில் அதிகரிப்பை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல் எது?
   1) மின்கட்டண கொடுப்பனவு ரூபா. 3000
   2) வங்கிகடன் வட்டி செலுத்தியது ரூபா. 2000
   3) உரிமையாளரினால் கடன் கொடுநருக்கு ரூபா. 7000 செலுத்தப்பட்டது.
   4) தளபாட கொள்வனவு ரூபா. 8000

20) கடன்பட்டோரிடம் பெற்று வைப்பிலிடப்பட்ட காசோலை ரூபா. 4000 மதிப்பிழந்தது. மதிப்பிழந்த காசோலையை பதிவதற்கான இரட்டைப்பதிவு.
   1) வங்கி கணக்கு வரவு ரூபா. 4000
      கடன்பட்டோர் கணக்கு செலவு ரூபா. 4000
   2) கடன்பட்டோர் வரவு ரூபா. 4000
      வங்கி கணக்கு செலவு ரூபா. 4000
   3) காசுக் கணக்கு வரவு ரூபா. 4000
      கடன்பட்டோர் கணக்கு செலவு ரூபா. 4000
   4) கடன்பட்டோர் கணக்கு வரவு ரூபா. 4000
      காசுக்கணக்கு செலவு ரூபா. 4000



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

21) நிரல் X கணக்கு வகைகளையும் நிரல் Y கணக்குகளுக்கான உதாரணங்களையும் குறித்து காட்டுகிறது.

| நிரல் X | | நிரல் Y | |
|---|---|---|---|
| 1. | சொத்து கணக்கு | A. | பற்று |
| 2. | செலவு கணக்கு | B. | வங்கிக்கடன் |
| 3. | உரிமை கணக்கு | C. | மோட்டார் வாகனம் |
| 4. | வருமான கணக்கு | D. | பெற்ற கழிவு |
| 5. | பொறுப்பு கணக்கு | E. | மின்கட்டணம் |

நிரல் X ற்கு பொருத்தமாக நிரல் Y ஐ ஒழுங்குபடுத்தும் போது சரியாக அமைவது.

1) C E A D B  2) B A E C D  3) A B C D E  4) E C A D B

22) இரட்டைப் பதிவு தத்துவத்தின்படி அதிகரித்தால் வரவிலும் குறைவடைந்தால் செலவிலும் பதியும் கணக்கு எது?

1) பெற்ற கழிவு கணக்கு  2) மூலதன கணக்கு
3) கடன்கொடுத்தோர் கணக்கு  4) கடன்பட்டோர் கணக்கு

23) சக்தி தளபாட நிலையம் ரூபா. 15000 000 பெறுமதியான லொறி ஒன்றினை யமுனா மோட்டார் கம்பனியிடம் கடனுக்கு கொள்வனவு செய்தது. இதனைப் பதிவு செய்ய தேவையான மூல ஆவணமும் மூல ஏடும் முறையே

1) கொள்வனவு பட்டியல், கொள்வனவு நாளேடு
2) கொள்வனவு நாளேடு, கொள்வனவு பட்டியல்
3) பொது நாட்குறிப்பேடு, நாட்குறிப்பு கச்சாத்து
4) நாட்குறிப்பு கச்சாத்து, பொது நாட்குறிப்பேடு

24) வணிகமொன்றின் வங்கி கணக்கு மீதி ரூபா. 20 000 இனையும் வங்கி கூற்று மீதி ரூபா. 22000 இனையும் 31.01.2021 இல் காட்டியது. இவ் வேறுபாட்டுக்கு பொருத்தமான கொடுக்கல் வாங்கல் எது?

1) நிலையான கட்டளைக் கொடுப்பனவு காப்புறுதி ரூபா. 2000
2) வைப்பிலிட்டு வசூலிக்கப்படாத காசோலை ரூபா. 2000
3) நேரடியாக வங்கியிலிட்ட நேரடி வைப்பு ரூபா. 2000
4) வங்கி அறவிட்ட வங்கி கட்டணம் ரூபா. 2000

25) கடன்பட்டோர் நாதனிடம் ரூபா. 8000 பெறும் போது 10% கழிவு சிவாவினால் வழங்கப்பட்டது. இக்கொடுக்கல் வாங்கலில் சிவா வணிகத்திற்குரிய கழிவு

1) பெற்ற கழிவு ரூபா. 8000  2) கொடுத்த கழிவு ரூபா. 800
3) கொடுத்த கழிவு ரூபா. 8000  4) பெற்ற கழிவு ரூபா. 800

26) சுனிதா வணிகத்தின் சில்லறைக் காசு வசக்கட்டு நிதி ரூபா. 4000. 31.01.2021 இல் சில்லறைக் காசு மீதி ரூபா. 300. சில்லறைக் காசுக்கட்டு நிதியை ரூபா. 500 ஆல் பெப்ரவரி மாதத்திலிருந்து அதிகரிக்க தீர்மானித்தனர். இதற்கிணங்க 01.02.2021 இல் மீள் நிரப்ப வேண்டிய தொகை எவ்வளவு?

1) ரூபா. 3700  2) ரூபா. 4000  3) ரூபா. 4200  4) ரூபா. 4500

27) சாலினி வணிகத்தினால் தயாரிக்கப்பட்ட மூலஏடானது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தது. திகதி, பட்டியல் இல, வழங்குனர் பெயர், பெறுமதி மற்றும் பேரேட்டுபக்கம். இதற்கு பொருத்தமான மூல ஏடு எது?

1) விற்பனை நாளேடு  2) கொள்வனவு நாளேடு
3) சில்லறை காசேடு  4) பொதுநாட்குறிப்பேடு



agaram.lk

28) தம்புள்ள தளபாட விற்பனை நிலையம் ரூபா. 20 000 பெறுமதியான தளபாடங்களை கடனுக்கு விற்பனை செய்தது. இக்கொடுக்கல் வாங்கலை பதிவதற்கான மூல ஏடு யாது?

1) பொதுநாட்குறிப்பேடு
2) விற்பனை நாளேடு
3) காசேடு
4) கொள்வனவு நாளேடு

29) இலத்திரனியல் வங்கி (E.Banking) முறைமை மூலம் வழங்க முடியாத சேவை யாது?

1) மின், நீர் கட்டணங்கள் செலுத்துதல்.
2) வங்கி கணக்கு மீதியை செல்வை பார்த்தல்.
3) காசோலை புத்தகத்திற்கு விண்ணப்பித்தல்.
4) ஒரு வங்கி கணக்கிலிருந்து இன்னொரு வங்கி கணக்குக்கு பணத்தை மாற்றுதல்.

30) கணக்கீட்டு செயன்முறையின் சரியான ஒழுங்கு வரிசை யாது?

1) கொடுக்கல் வாங்கல் ⟶ மூல ஆவணம் ⟶ மூல ஏடு ⟶ பேரேடு ⟶ பரீட்சை மீதி ⟶ நிதியறிக்கைகள்
2) மூல ஆவணம் ⟶ கொடுக்கல் வாங்கல் ⟶ மூல ஏடு ⟶ பேரேடு ⟶ பரீட்சை மீதி ⟶ நிதியறிக்கைகள்
3) மூல ஆவணம் ⟶ கொடுக்கல் வாங்கல் ⟶ பேரேடு ⟶ மூல ஏடு ⟶ பரீட்சை மீதி ⟶ நிதியறிக்கைகள்
4) கொடுக்கல் வாங்கல் ⟶ மூல ஆவணம் ⟶ பேரேடு ⟶ மூல ஏடு ⟶ பரீட்சை மீதி ⟶ நிதியறிக்கைகள்

31) மிகிரி ஸ்ரோர்ஸ் 04.01.2021 அன்று பின்வரும் மூல ஆவணங்களை பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டது.
பற்றுச்சீட்டு, கொடுப்பனவு கைச்சாத்து, நாட்குறிப்பு கைச்சாத்து இவற்றிற்குரிய சரியான கொடுக்கல் வாங்கலைக் காட்டும் விடை தொகுதி எது?

1) காசு விற்பனை, கடனடிப்படையில் நடைமுறையல்லா சொத்து கொள்வனவு, ஊழியர் சம்பள கொடுப்பனவு
2) கடன் விற்பனை, கடனடிப்படையில் நடைமுறை அல்லா சொத்து கொள்வனவு, ஊழியர் சம்பள கொடுப்பனவு
3) கடனடிப்படையில் நடைமுறையல்லா சொத்து கொள்வனவு, காசுக்கு கொள்வனவு, சம்பள கொடுப்பனவு
4) காசு விற்பனை ஊழியர் சம்பள கொடுப்பனவு, கடனடிப்படையில் நடைமுறை அல்லா சொத்து கொள்வனவு

32) பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்றை தெரிவு செய்க.

1) வணிகமொன்றின் பொறுப்பு கணக்கிற்கு உதாரணம் மூலதன கணக்காகும்.
2) வணிகமொன்றினால் தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கு மீதி செலவு மீதியை காட்டும் போது அது வணிகத்திற்கு சாதகமீதியாகும்.
3) காசேடு மூல ஏடாகவும் பேரேடாகவும் தொழிற்படுகிறது.
4) இரட்டைப்பதிவு தத்துவத்தில் அதிகரித்தால் வரவு குறைவடைந்தால் செலவு எனும் தாக்கம் சொத்து கணக்குக்கும் வருமான கணக்குக்குமாகும்.

33) பரீட்சை மீதியொன்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதி வருமாறு.

| | **விபரம்** | **வரவு (ரூபா)** | **செலவு (ரூபா)** |
|---|---|---|---|
| 1. | பியல் கணக்கு | 1000 | - |
| 2. | ஜனித்தா கணக்கு | - | 3000 |
| 3. | விற்பனை கணக்கு | - | 5000 |
| 4. | சம்பள கணக்கு | 1200 | - |

மேற்தரப்பட்ட விடயங்கள் முறையே எக்கணக்கு வகையைச் சேர்ந்தது?

1) சொத்து, பொறுப்பு, வருமானம், செலவு
2) பொறுப்பு, சொத்து, வருமானம், செலவு
3) சொத்து, பொறுப்பு, செலவு, வருமானம்
4) பொறுப்பு, சொத்து, செலவு, வருமானம்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

34) கடன்பட்டோரிடம் பெற்ற காசோலைக்கான சரியான இரட்டைப் பதிவாக அமைவது.
1) காசு கணக்கு வரவு
கடன்பட்டோர் கணக்கு செலவு
2) கடன்பட்டோர் கணக்கு வரவு
காசுக் கணக்கு செலவு
3) வங்கிக் கணக்கு வரவு
கடன்பட்டோர் கணக்கு செலவு
4) கடன்பட்டோர் கணக்கு வரவு
வங்கி கணக்கு செலவு

35) சாந்தி வியாபாரத்தின் 2021 ஜனவரி மாதத்தில் கொள்வனவு நாளேட்டின் மொத்தம் ரூபா. 4800 ஆக காணப்பட்டது. இதனை பேரேட்டுக்கு மற்றும் போது சரியான இரட்டை பதிவு யாது?
1) கொள்வனவு கணக்க வரவு
காசுக்கணக்கு செலவு
2) கொள்வனவு கணக்கு வரவு
வங்கி கணக்கு செலவு
3) கொள்வனவு கணக்கு வரவு
கடன்கொடுத்தோர் கணக்கு செலவு
4) கடன்பட்டோர் கணக்கு வரவு
கொள்வனவு கணக்கு செலவு

36) கணணிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டினால்
1) நேரம் சேமிக்கப்படும் 2) செலவு குறைவு
3) நம்பகதன்மை அதிகரிக்கும் 4) மேற்கூறிய எல்லாம்

37) சுகந்தி கம்பனி 1000 ஊதுபத்திகளை ஒவ்வொன்றும் ரூபா. 30 படி 10% வியாபார கழிவில் 2021 ஜனவரி மாதம் விற்பனை செய்தது. இவ் வியாபாரத்தின் ஜனவரி மாத மொத்த விற்பனைப் பெறுமதி
1) ரூபா. 22500 2) ரூபா. 2500 3) ரூபா. 27000 4) ரூபா. 30000

38) பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யும் கொடுக்கல் வாங்கல் எது?
1) அசோகா கம்பனி 1000 சீமெந்து பைகளை ஒவ்வொன்றும் ரூபா. 900 படி விற்பளை செய்தது.
2) சாந்தி கட்டிட நிர்மாண நிறுவனம் சீமெந்து கலக்கும் இயந்திரத்தை ரூபா. 20 இலட்சத்திற்கு கடனுக்கு கொள்வனவு செய்தது.
3) தருண கம்பனி ரூபா. 10 000 சிறுவர் இல்லமொன்றுக்கு நன்கொடையாக வழங்கியது.
4) சாரா புத்தக நிலையத்தின் காசாளரால் சில்லறை காசாளனுக்கு கட்டுநிதி மீள் நிரப்பப்பட்டது ரூபா. 5000

39) பரீட்சை மீதியின் இணக்கத்தைப் பாதிக்கும் வழுவாக அமைவது எது?
1) ரூபா. 3000 கொள்வனவு பட்டியல் ஏடுகளில் முழுமையாக தவறவிடப்பட்டது.
2) கட்டிட திருத்தச் செலவு ரூபா. 7500 கட்டிடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.
3) காசு விற்பனை ரூபா. 500 விற்பனை கணக்கில் வரவு வைக்கப்பட்டது.
4) கடன்பட்டோர் அமலிடம் பெற்ற காசு ரூபா. 2000 விமல் கணக்கில் செலவு வைக்கப்பட்டது.

40) சுதனிடம் பெற்ற காசு ரூபா. 5000 காசுக்கணக்கில் சரியாக பதியப்பட்ட போதும் சுதன்கணக்கில் பக்கம் மாறி பதியப்பட்டது. இதனைத் திருத்துவதற்கான இரட்டைப்பதிவு யாது?
1) சுதன் கணக்கு வரவு ரூபா. 5000
காசுக் கணக்கு செலவு ரூபா. 5000
2) தொங்கல் கணக்கு வரவு ரூபா. 5000
சுதன் கணக்கு செலவு ரூபா. 5000
3) சுதன் கணக்கு வரவு ரூபா. 10000
தொங்கல் கணக்கு செலவு ரூபா. 10000
4) தொங்கல் கணக்கு வரவு ரூபா. 10000
சுதன் கணக்கு செலவு ரூபா. 10000



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

# றோயல் கல்லூரி

## கொழும்பு - 07

## முதலாந் தவணைப் பரீட்சை - 2021

## தரம் - 11

## வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் - II

60 T I

| பெயர் .............................................. | வகுப்பு ........... | சுட்டெண் .................. |
|---|---|---|

✦ **முதலாம் வினாவிற்கும் பகுதி I இல் இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் இரண்டு வினாக்களுக்கும் விடையளிக்க.**

01) பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (x) வரையான வினாக்களுக்க விடையளிக்க. காந்தி சமையலில் டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்துள்ளதுடன் வணிகமொன்றை ஆரம்பிக்க எண்ணியுள்ளார். அவரது பிரதேசத்தில் தேசிய பாடசாலை ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. அவர் ரூ. 200 000 காசு மற்றும் ரூ. 300 000 பெறுமதியான முச்சக்கரவண்டியை மூலதனமாக இட்டு 'ரசபியஸ' எனும் பெயரில் சிற்றுண்டிச்சாலை ஒன்றை பாடசாலைக்கு அருகாமையில் ஆரம்பித்தார். இதுவரை பாடசாலையினுள் சிற்றுண்டிச்சாலை எதுவும் இல்லை. அதே நாளில் அவர் ரூ. 100 000 வங்கிக் கடனொள்றை பெற்றுக்கொண்டதுடன் அவருக்கு உதவியாளர் ஒருவரையும் வேலைக்கமரத்தினார். காந்தி தேவையான உணவுப் பொருட்களை அவரது பிரதேசத்திலுள்ள பேக்கரி (Bakery) மற்றும் சிறியளவிலான உணவுப்பொருள் விநியோகத்தர்களிடமும் பெற்றுக்கொள்கின்றார். கடன் மற்றும் காசு அடிப்படைகளில் இவர் கொள்வனவு செய்கின்றார். எனினும் இவர் காசு அடிப்படையில் மட்டுமே உணவுப்பொருட்களை விற்பனை செய்கின்றார்.

2020 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

| | ரூபா. |
|---|---|
| உபகரணங்கள் கொள்வனவு .................... | 300 000 |
| உணவுப்பொருள் கொள்வனவு .................. | 15 000 |
| கடன் கொள்வனவு .................................... | 10 000 |
| கேஸ் கொள்வனவு........................................ | 3 000 |
| வாடகைக் கொடுப்பனவு ............................. | 5 000 |
| சம்பளக் கொடுப்பனவு ................................ | 8 000 |
| முச்சக்கர வண்டி பராமரிப்பு ....................... | 6 000 |
| ஏனைய செலவினங்கள் ............................... | 2 000 |
| மாதத்திற்கான விற்பனை .......................... | 100 000 |

i) a) உற்பத்தி தன்மையின் அடிப்படையில் 'ரசபியஸ' எவ்வகை வணிகமாகும்?
   b) இவ்வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படும் மனித தேவை யாது? அத்தேவையுடன் தொடர்புடைய விருப்பங்கள் இரண்டு தருக.

ii) a) இவ்வணிகம் எவ்வணிக அமைப்புக்குரியது?
   b) இவ்வணிகம் பதிவு செய்யப்பட வேண்டுமா? காரணம் தருக.

iii) a) மொத்த வியாபாரம் இடம்பெற்ற சந்தர்ப்பம் ஒன்று தருக.
   b) உதவியாளரை வேலைக்கமர்த்துதல் எம் முகாமைத்துவ கருமமாகும்?

iv) மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரு வணிகங்களைக் குறிப்பிட்டு அவை எவ்வகை வணிக அமைப்பு என்பதனையும் குறிப்பிடுக.

v) 01.01.2020 இல் கணக்கீட்டு சமன்பாட்டை தருக.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

vi) a) 01.01.2020 இல் மூலதனம் எவ்வளவு?
b) 31.01.2020 இல் இவ்வணிகத்தின் நடைமுறையல்லா சொத்துக்களின் பெறுமதியை கணிப்பிடுக.

vii) இவ்வணிகத்தில் பயன்படுத்தப்படும் இரு முதன்மை ஏடுகளையும் அவற்றுக்கான மூல ஆவணங்களையும் எழுதுக.

viii) உபகரணங்கள் கொள்வனவு ரூ. 300 000 இற்கான இரட்டைப்பதிவை பெறுமதியுடன் தருக.

ix) 2020.01.31 இல் கையிலுள்ள காசு மீதியை கணிக்க.

x) இவ்வணிகத்தின் கொள்வனவு நாளேட்டை தயாரித்து பேரேட்டுக் கணக்கிற்கு மாற்றுக.
(2 x 10 = 20 புள்ளிகள்)

## பகுதி I - வணிகக்கல்வி

✦ **இரு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

02) i) a) வணிகம் என்பது யாது?
b) மனித தேவை விருப்பங்களுக்கிடையிலான இரு வேறுபாட்டை தருக.
(02 புள்ளிகள்)

ii) பின்வரும் கூற்றுக்கள் சரியா பிழையா எனக் குறிப்பிடுக.
a) இலத்திரனியல் ஊடகங்கள் காரணமாக இன்றைய உலகமே பூகோளக் கிராமமாக மாறியுள்ளது.
b) அக்கறையுடைய தரப்பினரான வழங்குனர்களின் நோக்கம் நியாயமான சம்பளத்தைப் பெறுவதாகும்.
c) எரிபொருட்களின் விலை அதிகரித்தல் பொருளாதார சூழலுடன் தொடர்புடையதாகும்.
d) அனைத்து சில்லறை வியாபார வணிகங்களும் சேவை வழங்கும் வணிகங்களாகும்.
(02 புள்ளிகள்)

ii) கருணதாஸ வாழை இலையைப் பயன்படுத்தி Lunchsheet களை தயாரிக்கின்றார். வாழை உற்பத்தி விவசாயிகளிடமிருந்து வாழை இலைகளை கொள்வனவு செய்கின்றார். இவரது உற்பத்திகளை சிற்றுண்டிச்சாலைகளுக்கு விற்பனை செய்கின்றார்.
a) கருணதாஸ வணிகத்துடன் தொடர்புடைய அக்கறையுடைய தரப்பினர்கள் இருவரைக் குறிப்பிடுக.
b) மேலே (a) இல் குறிப்பிட்ட அக்கறையுடைய தரப்பினர்களின் நோக்கங்களை தருக.
(02 புள்ளிகள்)

iii) பெண்களுக்கான தொழில்வாய்ப்புக்கள் அதிகரித்ததை அடுத்து தைத்த ஆடைகளுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. திறமையான உதவியாள் ஒருவரின் உதவியுடன் நில்மினி சிறிய ஆடைத்தொழிற்சாலையொன்றை ஆரம்பித்தார். தரமான ஆடைகளை உற்பத்தி செய்து நில்மினியின் வணிகம் பிரபல்யமடைந்துள்ளது.

நில்மினி வணிகத்தின் பலம் மற்றும் வாய்ப்புக்களை தருக. (02 புள்ளிகள்)
(மொத்தம் 08 புள்ளிகள்

03) i) a) காசோலை என்பது யாது?
b) காசோலை குறுக்குக் கோடிடலின் இரு வகைகளை தருக. (02 புள்ளிகள்)

ii) பின்வரும் கூற்றுக்கள் சரியா தவறா எனக் குறிப்பிடுக.
a) இழப்பீட்டுத் தத்துவம் ஆயுள் காப்புறுதிக்கு பிரயோகிக்கப்படும்.
b) செய்தி பெறுபவர் செய்தி தொடர்பாக செயற்படும் முறையே தொடர்பாடலில் பின்னூட்டல் எனப்படுகிறது.
c) மகளின் திருமண நிகழ்வுக்கா 100kg அரிசியைக் கொள்வனவு செய்தல். சில்லறை வியாபாரமாகும்.
d) போக்குவரத்து ஊடகங்கள் செயற்படுத்தப்படும் இடம் தரிப்பிடம் ஆகும். (02 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

iii) அமல், கமல், மற்றும் விமல் ஆகியோர் மோட்டார் வாகனங்களை திருத்தும் திறமை வாய்ந்த பொறியியலாளர்கள் ஆவர். அவர்கள் இலாபத்தைப் பங்கிட்டுக் கொள்ளளவும் நட்டங்களை ஏற்றுக்கொள்ளவும் உடன்பட்டனர். வணிகத்தின் சகல செயற்பாடுகளிலும் பங்குபற்ற எதிர்பார்க்கின்றனர்.

a) அமல், கமல் மற்றும் விமல் ஆகியோருக்கு நீர் பரிந்துரை செய்யும் வணிக அமைப்பு யாது?

b) மேலே நீர் குறிப்பிட்ட வணிக அமைப்பின் அனுகூலம் ஒன்றையும் பிரதிகூலம் ஒன்றையும் தருக. (02 புள்ளிகள்)

iv) நிஷாந்தன் தனது மோட்டார் வாகனத்திற்கு ரூ. 2 000 000 பெறுமதியான காப்புறுதியை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பெற்றுக் கொண்டார். ஒரு நாள் மோட்டார் வாகனம் விபத்துக்குள்ளாகியதில் ரூ. 500 000 அளவில் சேதமடைந்தது.

a) காப்புறுதி செய்வோன் மற்றும் காப்புறுத்துவோனை தனித்தனியே குறிப்பிடுக.

b) நிஷாந்தன் பெற்றுக்கொள்ளக்கூடிய இழப்பீட்டுத்தொகை எவ்வளவு? அதனுடன் தொடர்புடைய காப்புறுதி தத்துவம் எது?

(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

04) i) a) முகாமைத்துவக் கருமங்களைக் குறிப்பிடுக.

b) சந்தைப்படுத்தல் என்பது யாது? (02 புள்ளிகள்)

ii) பின்வரும் கூற்றுக்கள் சரியா தவறா எனக் குறிப்பிடுக.

a) கொள்வனவாளரும் விற்பனையாளரும் தொடர்புறும் எந்தவொரு சந்தர்ப்பமும் சந்தைப்படுத்தல் ஆகும்.

b) முகாமையாளர்களால் ஊழியர்களுக்கு தகவல்களும் அறிவுறுத்தல்களும் வழங்கப்படுதல் கட்டுப்படுத்தல் ஆகும்.

c) விலை என்பது வணிகருக்கும் வாடிக்கையாளருக்கும் மிக முக்கியமான சந்தைப்படுத்தல் மாறியாகும்.

d) உற்பத்தியாளர் மற்றும் மொத்த வியாபாரி உற்பத்திப்பொருள் விநியோகத்தில் இடைத்தரகர்கள் செயற்படுகின்றனர்.

(02 புள்ளிகள்)

iii) குடிநீர் போத்தல் உற்பத்தி வணிகத்தின் செயற்பாடுகள் பின்வருமாறு.

- இயந்திர இயக்குனர்களை நியமித்தல்.
- இயந்திர இயக்குனர்களுக்கு தகவல் மற்றும் ஆலோசனை வழங்குதல்.
- குடிநீர்ப் போத்தலின் வடிவமைப்பை தீர்மானித்தல்.
- குடிநீர்ப் போத்தல்களின் தரப் பரிசீலனை செய்தல்.

மேலேயுள்ள செயற்பாடுகள் எம் முகாமைத்துவ கருமம் என்பதை தருக.

(02 புள்ளிகள்)

iv) சீமெந்துக் கற்களை உற்பத்தி செய்யும் வணிகத்தை நடாத்தும் பாலதேவா அவரது உற்பத்திகளை தாமே விநியோகிக்கின்றார்.

a) சீமெந்துக் கற்களுடன் தொடர்புடைய சநதைப்படுத்தல் கலவை எது?

b) பாலதேவாவினால் விநியோகிக்கப்படல் எவ் விநியோக முறை?

(02 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

www.agaram.lk

## பகுதி II - கணக்கீடு

✦ **இரு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

05) i) a) வணிகத்தில் அக்கறையுடைய தரப்பினர் இருவரை குறிப்பிடுக.

b) சொத்து, பொறுப்பு என்பவற்றுக்கிடையிலான ஒத்த தன்மை 2 தருக.

(02 புள்ளிகள்)

ii) சஜித் வியாபாரத்தில் 2021 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே தரப்படுகின்றது.

1. மூலதனமாக ரூபா. 50 000 ஈடுபடுத்தினார்.
2. பண்டங்கள் கடனுக்கு கொள்வனவு ரூபா. 10 000
3. ரூபா. 2000 கிரயமான பண்டங்கள் ரூபா. 3000 காசுக்கு விற்றார்.
4. செலுத்திய மின் கட்டணம் ரூபா. 4000

மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்களை கீழே தரப்பட்ட அட்டவணையில் ஏற்படுத்தும் தாக்கத்தை பெறுமதியுடன் குறித்து காட்டுக.

| கொ/வா இல | சொத்துக்கள் | = | உரிமையாண்மை | + பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| | சரக்கிருப்பு | காசு | மூலதனம் | கடன்கொடுநர் |
| 01 | | | | |
| 02 | | | | |
| 03 | | | | |

(06 புள்ளிகள்)

iii) நிகால் வணிகத்தில் 2021 ஜனவரி மாதம் இடம்பெற்ற காசுக் கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்படுகின்றது. 01.01.2021 இல் காசு மீதி ரூபா. 10 000

| திகதி | பற்றுச்சீட்டு இல | கைச்சாத்து இல | விபரம் | தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 02.01.2021 | 01 | | வங்கிக்கடன் பெற்றது | 15 000 |
| 05.01.2021 | | 01 | காசுக்கு பண்டங்கள் கொள்வனவு | 7000 |
| 10.01.2021 | 02 | | காசுக்கு விற்பனை | 3000 |
| 15.01.2021 | | 02 | செலுத்திய மின்கட்டணம் | 2000 |
| 30.01.2021 | 03 | | கடன்பட்டோரிடம் பெற்ற காசு | 1000 |

காசுக் கணக்கினை தயாரித்து 31.03.2021 இல் காசு மீதியை கணிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(மொத்தப்புள்ளி 12)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

06) i) சில்லறைக்காசு வசக்கட்டு நிதி மீள் நிரப்பு விளக்குக. (01 புள்ளிகள்)

ii) வணிகமொன்றில் இடம்பெற்ற இரு கொடுக்கல் வாங்கல்களுக்கான இரட்டைப்பதிவு கீழே தரப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| a) | கடன்பட்டோர் கணக்கு வரவு | ரூபா. | 6000 |
| | விற்பனை கணக்கு செலவு | ரூபா. | 6000 |
| b) | கடன் கொடுத்தோர் கணக்கு வரவு | ரூபா. | 9000 |
| | காசுக் கணக்கு செலவு | ரூபா. | 8000 |
| | பெற்ற கழிவு கணக்கு செலவு | ரூபா. | 1000 |

இரட்டைப் பதிவிற்கான இரு கொடுக்கல் வாங்கலினையும் எழுதுக. (01 புள்ளிகள்)

iii) இரத்தினம் வணிகத்தில் 2021 மார்ச் மாதத்தில் இடம்பெற்ற சில்லறை செலவு தொடர்பான தகவல்கள் வருமாறு.

| **திகதி** | **விபரம்** | **தொகை ரூபா** |
|---|---|---|
| 01.03.21 | பிரதான காசாளரால் மீள் நிரப்பப்பட்டது. ......... | 3000 |
| 02.03.21 | எழுதுகருவி கொள்வனவு ...................................... | 150 |
| 06.03.21 | போக்குவரத்து செலவு .......................................... | 200 |
| 09.03.21 | அலுவலக உபகரணம் கொள்வனவு ..................... | 500 |
| 11.03.21 | உபசரணை செலவு .................................................. | 130 |
| 14.03.21 | Taxi வாடகை ........................................................... | 180 |
| 18.03.21 | உட்சுமை கூலி .......................................................... | 160 |
| 21.03.21 | கூலிகள் ...................................................................... | 200 |
| 23.03.21 | பேனா பென்சில் ........................................................ | 210 |
| 25.03.21 | உபசரணை செலவு .................................................. | 170 |
| 26.03.21 | துப்பரவாக்கல் செலவு .......................................... | 220 |
| 01.04.21 | சில்லறைக்காசு மீள் நிரப்பப்பட்டது. | |

பின்வரும் பகுப்பாய்வு நிரல்களைக் கொண்ட சில்லறைக் காசேட்டில் பதிக.
(எழுதுகருவி செலவு, போக்குவரத்து செலவு, உபசரணை செலவு, நானாவிதம் பேரேடு)
(05 புள்ளிகள்)

iv) விக்கிரம் வணிகத்தில் ஜுன் மாதம் 2021 க்கு விற்பனை தொடர்பான பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றது.

| **திகதி** | **பட்டியல் இல** | **கடன்பட்டோர்** | **தேறிய பெறுமதி** |
|---|---|---|---|
| 04.06.21 | 610 | கௌசால் | 13500 |
| 07.06.21 | 611 | விஷால் | 8200 |
| 18.06.21 | 612 | நியோமி | 5300 |
| 28.06.21 | 613 | மயூரி | 9250 |

விற்பனை நாளேட்டிளை தயாரிப்பதுடன் பொருத்தமான பிற கணக்குகளையும் தயாரிக்குக.
(05 புள்ளிகள்)
(மொத்தம் 12 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

07) i) அ) வங்கி மேலதிக பற்று என்றால் என்ன?

ஆ) பொது நாட்குறிப்பேட்டில் பதியப்படும் இரு கொடுக்கல் வாங்கல்களை தருக.

(02 புள்ளிகள்)

ii) கீதா வணிகத்தின் 31.01.2021 இல் வங்கி கணக்கு மீதி ரூபா. 30000 ஐ காட்டியது. இது வங்கிக் கூற்று மீதியுடன் இணங்கவில்லை வேறுபாட்டிற்கான காரணங்கள் வருமாறு.

1. வைப்பிலிட்டு வசூலிக்கப்படாத காசோலை ரூபா. 5000.
2. நேரடி வைப்பு ரூபா. 3000
3. வழங்கப்பட்டு இன்னமும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூபா. 7000
4. நிலையான கட்டளையின் பேரில் வங்கி செலுத்திய காப்புறுதி கட்டணம் ரூபா. 2000

**வேண்டப்படுவது.**

1) சீராக்கிய வங்கி கணக்கு
2) 31.01.2021 இல் வங்கி இணக்க கூற்று. (04 புள்ளிகள்)

iii) ரவீந்திரா வியாபாரத்தின் பரீட்சை மீதியின் வரவுப் பக்கம் ரூபா. 28000 ஆல் செலவுப்பக்கத்தை விட குறைவாக காணப்பட்டது. கணக்காய்வில் பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டது.

1. கொள்வனவு பட்டியல் ஒன்றின் பெறுமதி ரூபா. 5000 முற்றாக ஏடுகளில் தவறவிடப்பட்டது.
2. விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகை ரூபா. 12000 ஆல் கூட்டிக் கூட்டப்பட்டிருந்தது.
3. போக்குவரத்து செலவு ரூபா. 16 000 போக்குவரத்து செலவுகணக்கில் பதியப்படவில்லை.
4. அமலுக்கு கொடுத்த காசு ரூபா. 9000 தவறுதலாக விமல் கணக்கில் வரவில் பதியப்பட்டது.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk